**மாண்பமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : திரு.M. மாரி, M.S.W., L.L.B.,**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில்**

**Cr.M.P.No. 947/2026**

**and**

**Cr.M.P.No. 951/2026**

**திருவேங்கடம் காவல் நிலைய குற்ற எண்.224/26**

**பிரிவுகள் 296(b), 329(2), 324(4), 351(2) BNS**

**உத்தரவு நாள்: 05.08.2026**

**CNR No. TNTS09-002354--2026**

**CNR No. TNTS09-002371--2026**

சங்கர்,
த/பெ. நவநீதகிருஷ்ணன்

... மனுதாரர்/எதிரி

/எதிர்/

ரவிச்சந்திரன்,
க/பெ. ஸ்ரீராமலு

... நிகழ்நிலை புகார்தாரர்

/ எதிர்/

காவல் ஆய்வாளர்,
திருவேங்கடம் காவல் நிலையம்
குற்ற எண்.224/2026

... எதிர்மனுதாரர்/வாதி

**மனுநாள்: 03.08.2026, மனு 480 BNSS**

**மனுநாள்: 05.08.2026, மனு 338 (2) of BNSS**

1. இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் எதிரிக்கு பிணை வழங்கக்கூடாது என்று ஆட்சேபணை மனு தாக்கல் செய்து அம்மனு சி.ஆர்.எம்.பி. 951/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2. **மனுதாரரின் பிணை மனுவின் சுருக்கம்**

மனுதாரர்/எதிரி தரப்பில், மனுதாரர்/எதிரி 02.08.2026 முதல் காவலில் இருந்து வருவதாகவும், எதிரிக்கும், நிகழ்நிலை புகார்தாரருக்கும் இடயேயான பிரச்சனை இடம் சம்பந்தமான பிரச்சனை ஆகும். சர்வே எண். 787/1 இடமானது நிகழ்நிலை புகார்தாரரின் பெயரில் இல்லை. அது வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் அரசு புறம்போக்கு நிலமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், ஆனால், நிகழ்நிலை புகார்தாரர் சட்டத்திற்கு புறம்பாக மேற்படி இடத்தை அபகரிக்க முயற்சி செய்து வருவதால் எதிரி வருவாய் கோட்டாட்சியர் (Revenue Divisional Officer) அவர்களிடம் மனு

கொடுத்து அம்மனு மீது வட்டாட்சியருக்கு ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி கடிதம் வழங்கியதாகவும், இதற்கிடையில் எதிரி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவிலில் O.S.No. 94/2026 என்ற எண்ணில் மேற்படி சொத்து சம்பந்தமாக மேற்படி நிகழ்நிலை புகார்தாரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, நிகழ்நிலை புகார்தாரர் பொய்யான சங்கதிகளைக் குறிப்பிட்டு புகார் மனு கொடுத்து அதன் அடிப்படையில் திருவேங்கடம் காவல் நிலைய போலீசார் எதிரியை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தி, மனுதாரர்/எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். அதனால் எதிரியை பிணையில் விடுவிக்கக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேலும், மனுதாரர்/எதிரி நிரந்த முகவரி உடையவர் என்றும், அவர் நீதிமன்ற நிபந்தனைக்கு கட்டுப்படுவார் என்றும், எதிரியை பிணையில் விடுவிக்கும்பட்சத்தில் தகுந்த பிணையதாரர்களை வழங்குவதாகவும், எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது.

3. <u>நிகழ்நிலை புகார்தாரர் தரப்பின் சுருக்கம்</u>

எதிரி தங்களுக்குச் சொந்தமான இடத்தை அத்துமீறி தொடர்ந்து இடையூறு செய்து வந்து, அதன் தொடர்ச்சியாக CSR.No.25/2026, குற்ற எண். 213/2026 பதிவு செய்தும், அதன் தொடர்ச்சியாக தற்போது உள்ள குற்ற எண். 224/2026 வழக்கு பதிவு செய்து, எதிரியை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும், எதிரி தற்போது நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்துள்ளார். மேலும், எதிரியை பிணையில் விடுவித்தால் எதிரி நிகழ்நிலை புகார்தாரரை மிரட்டவோ, சாட்சிகளை கலைக்கவோ வாய்ப்புள்ளது. அதனால் எதிரியை பிணையில் விடுவிக்க வேண்டாம் எனவும், எதிரியின் செயலால் நிகழ்நிலை புகார்தாரருக்கு ரூ.50,000/- மதிப்புள்ள கல், இரும்பு வேலி சேதம் அடைந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. அரசு தரப்பில், திருவேங்கடம் காவல் நிலைய குற்ற எண். 224/2026 வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வழக்கின் எதிரிக்கும், மனுதாரருக்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக CSR 25/26 பதியப்பட்டு, திருவேங்கடம் காவல் நிலைய குற்ற எண். 213/2026 பிரிவு 324 BNS பதியப்பட்டு, எதிரி மீது வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வழக்கின் எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் எதிரிகள் இதுபோன்ற குற்றச் செயலில் தொடர்ந்து ஈடுபட வாய்ப்புள்ளதாலும், வழக்கின் சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், மேலும், எதிரி மீது ஏற்கனவே 1) விருதநகர் மாவட்டம் மல்லி காவல் நிலைய குற்ற எண். 158/2015 இ.த.ச. பிரிவுகள் 147, 294(பி), 341, 353, 50691), 2) திருவேங்கடம் காவல் நிலைய குற்ற எண். 2/2023 இ.த.ச. பிரிவு 291 3) குற்ற எண். 164/2020 இ.த.ச. பிரிவுகள் 294(பி), 324, 342, 506(1) 4) குற்ற எண். 213/2026 பிரிவு 324(4) BNS நான்கு வழக்குகள் நிலுவையில் இருந்து வருவதாகவும், எனவே, மேற்படி எதிரியை பிணையில் விடுவதற்கு கடுமையான ஆட்சேபனை செய்வதாக எடுத்துரைக்கப்பட்டது.

5. இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், மனுதாரர்/எதிரி பிணையில் வெளிவந்தால் தான் அளித்த புகாரை வாபஸ் பெறச் சொல்லி தன்னை மிரட்ட வாய்ப்புள்ளது என்றும், சம்பவத்தை கண்கண்ட சாட்சிகள் மனுதாரரின் கிராமத்தில் குடியிருப்பதால், மனுதாரர் பிணையில் வெளிவந்தால் அச்சாட்சிகளை கலைப்பதற்கு வாய்ப்புள்ளது என்றும், தனக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்றவியல் நடவடிக்கைகளில் இருந்து தப்பிப்பதற்கு மனுதாரர் முயற்சிக்கக்கூடும் என்றும், மனுதாரர் மற்றும் புகார்தாரர் வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பயன்படுத்தி புகார்தாரரை வெளியேற்றுவதற்கு மனுதாரர் பிணையில் வெளிவந்தால் முயற்சிப்பார் என்றும், மனுதாரரை பிணையில் வெளியே விடுவது புகார்தாரரின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் என்றும், மனுதாரர் மிகுந்த ஆள்சேர்க்கை மற்றும் பணபலம் கொண்டவர் என்றும், அவர் பிணையில் விடுவிக்கப்பட்டால் சாட்சிகளை கலைக்க வாய்ப்புள்ளது என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

6. மூன்று தரப்பும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், நிகழ்நிழை புகார்தாரருக்கும், எதிரிக்கும் இடையே முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் O.S.No. 94/2026 என்ற எண்ணில் சர்வே எண். 787/1 ல் இடம் சம்பந்தமான வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்பதைக் கருத்தில் கொண்டும், மேலும், நிகழ்நிலை புகார்தாரர் ரூ.50,000/- மதிப்புள்ள கம்பி, கல்தூண் ஆகியவற்றை எதிரி சேதப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், அதனை உறுதியூட்டும்விதமாக நிகழ்நிலை புகார்தாரரால் அவர் பெயரில் உள்ள பட்டாவோ, பத்திரமோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி இடம் யாருக்கு உரிமை என்பதை இந்நீதிமன்றம் தீர்மானிக்க இயலாது. ஆனால், மேற்படி சொத்து அழிம்பு சம்பந்தமாக குற்றவியல் முகாந்திரத்தை பரிசீலிக்கையில், மேற்படி ரூ.50,000/- சேதம் ஏற்படுத்தியதற்கான மற்ற சான்றாவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆனால், நிகழ்நிலை புகார்தாரர் எதிரி சேதம் ஏற்படுத்தியதாக புகைப்பட ஆதாரங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். ஆனால் அந்த புகைப்படம் நிகழ்நிலை புகார்தாரருக்கு எப்படி கிடைக்கப்பட்டது? எதன் மூலம் கிடைக்கப்பட்டது? என்பதற்கான இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65B-ல் குறிப்பிட்டுள்ளபடி சான்றிதழ் இணைத்து தாக்கல் செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. மேற்படி குற்ற வழக்கு விசாரணையானது சாட்சிகள் ரவிச்சந்திரன், கீர்த்தனா, வேல்சாமி, கிருஷ்ணமூர்த்தி, அழகர்சாமி, ஆனந்தராஜ் மற்றும் பார்வை மகஜர், அத்தாட்சி ஆகிய சாட்சிகளும், சான்றவணங்களும் விசாரித்து இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கு விசாரணை பெரும்பகுதி முடிவடைந்துவிட்டது என்பதைக் கருத்தில்கொண்டும், மேற்படி எதிரி மீது பதிவாகியுள்ள சட்டப்பிரிவானது 7 ஆண்டுகளுக்குள் உள்ள சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றம் என்பதாலும், நீண்ட நாட்கள் எதிரியை நீதிமன்றக் காவலில் வைத்திருக்க முடியாது என மாண்பமை

உச்ச நீதிமன்றம் **State of Rajasthan – Vs – Balachand @ Baliay (1977) is a landmark Supreme Court of India Case that firmly established the legal principle " bail is the rule, jail is an exception". Justice V.R. Krishna Iyer stated that bail should not be refused unless there are risks of fleeing justice.** என்ற முன்தீர்ப்பின் அடிப்படையிலும், மேற்படி எதிரிக்கும், நிகழ்நிலை புகார்தாரருக்கும் இடையேயுள்ள பிரச்சனை உரிமையியல் நீதிமன்ற நிலையில் இருந்து வருதைக் கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் எதிரி புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு தருவார் என்று கருதியும், மேலும், எதிரியை பிணையில் விடுவது எந்த விதத்திலும் அரசு தரப்பு வழக்கை பாதிக்காது என்று கருதியும், இந்த வழக்கின் தன்மை மற்றும் நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு மனுதாரர்/எதிரியை பிணையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் விடுவிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**7. சி.ஆர்.எம்.பி.எண். 947/2026 மனுவின் நிபந்தனைகள் :-**

1. மனுதாரர்/எதிரி தானும், தனி இரு நபர்களும் தலா ரூ.10,000/-த்திற்கு பிணைப்பத்திரம் இயற்றித் தரவேண்டும். மேற்குறிப்பிட்ட இரு நபர்களுள் ஒருவரேனும் இரத்த சம்பந்தப்பட்டவராக இருக்க வேண்டும்.
2. மேற்குறிப்பிட்ட இரண்டு பிணையதாரர்களும் கடந்த 6 மாதத்திற்குள் எடுக்கப்பட்ட புகைப்படத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பிணையப்பத்திரத்தில் ஒட்ட வேண்டும்.
3. மனுதாரர்/எதிரி பிணைப்பத்திரம் நிறைவேற்றும் நேரத்தில் தனது மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
4. மனுதாரர் / எதிரி புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.
5. மனுதாரர் / எதிரி சாட்சிகளை கலைக்கவோ, மிரட்டவோ கூடாது.
5. மனுதாரர் / எதிரி பிணையில் வெளிவந்த பிறகு இந்நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு ஆஜராகி 15 நாட்களுக்கு தொடர்ந்து கையொப்பமிட வேண்டும்.

8. முடிவில், சி.ஆர்.எம்.பி.எண். 951/2026 மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

M MARI
Digitally signed by M MARI
Date: 2026.08.05 18:57:56 +0530

நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்